பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 6

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 13

கன்னிப்பெண் மர்யம், குமாரர் ஈஸா 19

முன்னுரை 21

1 குர்ஆனின் பார்வையில் மர்யம் 23

2 நபிமொழிகளின் பார்வையில் மர்யம் 32

3 நபிமொழிகளின் பார்வையில் ஈஸா இப்னு மர்யம் 34

உலகப் பெண்களில் உன்னதப் பெண் ஃபாத்திமா

முன்னுரை 41

1 ஃபாத்திமா ﷺ – சுருக்கமான அறிமுகம் 43

2 கஷ்டங்களாலும் பொறுமையாலும் நிரம்பிய வாழ்வு 44

3 வாழ்க்கையின் நெருக்கடிகளில் பொறுமை காத்தவர் 47

4 மணவாழ்க்கையில் எளிமையானவர் 50

5 அல்லாஹ்வின் தூதருக்கு மிகவும் விருப்பமானவர், தோற்றத்தில் அவர்களைப் போன்றே இருப்பவர் 52

6 சொர்க்கத்துப் பெண்களின் தலைவி 55

7 உலகத்துப் பெண்களில் சிறந்தவர் 58

8 ஒரே நேரத்தில் சிரிப்பும் அழுகையும் 60

9 ஒவ்வொருவரும் மரணத்தைச் சுகித்தே தீர வேண்டும் 63

2

நபிமொழிகளின் பார்வையில் மர்யம்

❀

இம்றானின் மகள் மர்யமைக் குறித்து நபியவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டவை:

1. நபியவர்கள் கூறினார்கள்:

خَيْرُ نِسَاءِ الْعَالَمِينَ: مَرْيَمُ بِنْتُ عِمْرَانَ، وَخَدِيجَةُ بِنْتُ خُوَيْلِدٍ، وَفَاطِمَةُ بِنْتُ مُحَمَّدٍ - صلى الله عليه وسلم - وَآسِيَةُ امْرَأَةُ فِرْعَوْنَ

'உலகத்துப் பெண்களில் மிகச் சிறந்தவர்கள், மர்யம் பின்த் இம்றான், கதீஜா பின்த் குவய்லித், ஃபாத்திமா பின்த் முஹம்மது மற்றும் பிர்அவ்னின் மனைவி ஆசியா ஆவார்கள். (அறிவிப்பு: அனஸ் இப்னு மாலிக் ﵁, திர்மிதீ 3878, ஸஹீஹுல் ஜாமிஉ 3143)

2. நபியவர்கள் கூறினார்கள்:

كَمُلَ مِنْ الرِّجَالِ كَثِيرٌ، وَلَمْ يَكْمُلْ مِنْ النِّسَاءِ إِلَّا آسِيَةُ امْرَأَةُ فِرْعَوْنَ وَمَرْيَمُ بِنْتُ عِمْرَانَ وَإِنَّ فَضْلَ عَائِشَةَ عَلَى النِّسَاءِ كَفَضْلِ الثَّرِيدِ عَلَى سَائِرِ الطَّعَامِ

'ஆண்களில் பலர் முழுமையான பண்புகளைப் பெற்றிருந்தார்கள். பெண்களில் மர்யம் பின்த் இம்றான், ஃபிர்அவ்னின் மனைவி ஆசியா ஆகியவர்கள்தாம் முழுமையான பண்புகளைப் பெற்றிருந்தார்கள்.' (அறிவிப்பு: அபூ மூஸா அல்அஷ்அரீ ﵁, புகாரீ 3230, முஸ்லிம் 2431)

3. நபியவர்கள் கூறினார்கள்:

خَيْرُ نِسَائِهَا خَدِيجَةُ بِنْتُ خُوَيْلِدٍ وَخَيْرُ نِسَائِهَا مَرْيَمُ بِنْتُ عِمْرَانَ

'பெண்களில் மிகச் சிறந்தவர் மர்யம் பின்த் இம்றான், பெண்களில் மிகச் சிறந்தவர் கதீஜா பின்த் குவய்லித்.' (அறிவிப்பு: அலீ இப்னு அபீ தாலிப் ﵁, முஸ்லிம் 2430)

1

ஃபாத்திமா ﵂ – சுருக்கமான அறிமுகம்

❀

- இறைத்தூதர்களில் இறுதியானவர் முஹம்மது ﷺ அவர்களின் மகள்தான் ஃபாத்திமா ﵂. அவரது தாயார் கதீஜா பின்த் குவய்லித் ﵂ ஆவார்.
- நபித்துவம் வழங்கப்படுவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்தார்; இருபத்தைந்து வயது வரை வாழ்ந்தார்; நபியவர்கள் இறந்து ஐந்து மாதங்களுக்குப் பின்னர் மரணமடைந்தார். இருபத்தெட்டு வயது வரை வாழ்ந்தார் என்றும் கூறப்படுகிறது.
- ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு பத்ர் போருக்குப் பின் துல்காயிதா மாதத்தில் அலீ இப்னு அபூ தாலிப் ﵁ அவர்களை மணந்தார். உஹுது போருக்குப் பின் மணவாழ்வைத் தொடங்கினார்.
- ஹஸன், ஹுசைன் ﵄ என்ற இரண்டு புதல்வர்களைப் பெற்றெடுத்தார்.
- அவரது காலத்தில் உலகத்துப் பெண்களின் தலைவியாவார். குறைஷிக் குலத்தைச் சேர்ந்த தூய்மையான பரம்பரையில் வந்தவர். நன்னடத்தையுள்ள, இஸ்லாமுக்காக அதிகம் ரோஷப்படக்கூடிய பெண்மணியாவார்.
- தூய்மையான, இனிமையான பேச்சுக்குச் சொந்தக்காரர்; ஏழைகளுக்கும் வறியவர்களுக்கும் உதவுபவர்; அனைவராலும் நேசிக்கப்பட்டவர்.

அவரது தூய்மையான வாழ்க்கையின் சில பகுதிகளைக் காண்போம். அறிவுரை மற்றும் படிப்பினை பெறுவோம். ஏனெனில், அவர் அல்லாஹ் நேர்வழிகாட்டிய பெண்மணிகளில் ஒருவராவார்.

3

வாழ்க்கையின் நெருக்கடிகளில் பொறுமை காத்தவர்

❀

அவர் அலீ ﷺ அவர்களைத் திருமணம் செய்தபோது அவர்களிடம் ஆட்டுத் தோலிலான விரிப்பைத் தவிர வேறெதுவும் இருக்கவில்லை. இரவில் அவர்கள் தூங்குவதற்காகவும் பகலில் தலையணையாகவும் அதனைப் பயன்படுத்திக் கொண்டார்கள். ஆயினும் அவர் மன நிறைவு கொண்டார். தம் தந்தையாரிடமிருந்து எதையும் கேட்க வில்லை. ஏனெனில், அவர் போதும் என்ற மனப்பான்மை கொண்டவராகவும் அல்லாஹ் விதித்த விதியை ஏற்றுக் கொண்ட வராகவும் இருந்தார்.

அவரைக் குறித்து இறைநம்பிக்கையாளர்களின் தலைவர் அலீ ﷺ அவர்கள் கூறுவதைப் பார்ப்போம்:

لَمَّا زَوَّجَنِي رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَاطِمَةَ, بَعَثَ مَعَهَا بِخَمِيلَةٍ وَوِسَادَةٍ مِنْ أَدَمٍ حَشْوُهَا لِيفٌ, وَرَحَيَيْنِ وَسِقَاءٍ، وَجَرَّتَيْنِ

‘நபியவர்கள் தமது மகள் ஃபாத்திமாவை எனக்கு மணமுடித்துக் கொடுத்தபோது அவருடன் ஒரு போர்வை, பேரீச்சை மர நாரால் நிரப்பப்பட்ட ஒரு தலையணை, மாவரைக்கும் இரண்டு கற்கள், ஒரு தண்ணீர் பை, இரண்டு மண்பானை ஆகியவற்றைக் கொடுத்து அனுப்பினார்கள்.’ *(முஸ்னது அஹ்மது 819, ஸஹீஹ் அத்தர்ஃகீப் வத்தர்ஹீப் 3301)*

அலீ ﷺ மேலும் கூறுகிறார்:

أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لَمَّا زَوَّجَهُ فَاطِمَةَ بَعَثَ مَعَهُ بِخَمِيلَةٍ، وَوِسَادَةٍ، مِنْ أَدَمٍ حَشْوُهَا لِيفٌ وَرَحَيَيْنِ وَسِقَاءٍ وَجَرَّتَيْنِ، فَقَالَ عَلِيٌّ لِفَاطِمَةَ ذَاتَ يَوْمٍ: وَاللَّهِ لَقَدْ سَنَوْتُ حَتَّى لَقَدِ اشْتَكَيْتُ صَدْرِي، قَالَ: وَقَدْ جَاءَ اللَّهُ أَبَاكِ بِسَبْيٍ، فَاذْهَبِي فَاسْتَخْدِمِيهِ، فَقَالَتْ:

5

அல்லாஹ்வின் தூதருக்கு மிகவும் விருப்பமானவர், தோற்றத்தில் அவர்களைப் போன்றே இருப்பவர்

❀

كَانَ أَحَبَّ النَّاسِ إِلَى رَسُولِ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَاطِمَةُ

ஃபாத்திமா அல்லாஹ்வின் தூதருக்கு மிகவும் விருப்பமானவராக இருந்தார். (அறிவிப்பு: இப்னு புரைதா ﷺ, ஸுனன் அல்குப்ரா லிந்நசாயீ 8444)[2]

அன்னை ஆயிஷா ﷺ அறிவிக்கிறார்:

مَا رَأَيْتُ أَحَدًا أَشْبَهَ سَمْتًا وَدَلاًّ وَهَدْيًا بِرَسُولِ اللَّهِ فِى قِيَامِهَا وَقُعُودِهَا مِنْ فَاطِمَةَ بِنْتِ رَسُولِ اللَّهِ -صلى الله عليه وسلم-. قَالَتْ وَكَانَتْ إِذَا دَخَلَتْ عَلَى النَّبِىِّ -صلى الله عليه وسلم- قَامَ إِلَيْهَا فَقَبَّلَهَا وَأَجْلَسَهَا فِى مَجْلِسِهِ

தோற்றத்தில், செயல்பாடுகளில் அல்லாஹ்வின் தூதருக்கு ஒப்பாக அவர்களது மகள் ஃபாத்திமாவைவிட எவரையும் நான் கண்டதில்லை. அவர் எழும்போதும், அமரும்போதும் நபியவர்களின் தோற்றத்தையே ஒத்திருப்பார். ஃபாத்திமா தம்மிடம் வந்தால் அல்லாஹ்வின் தூதர் எழுந்து வரவேற்று அவரை முத்தமிடுவார்கள். அவரை தம்முடன் அவையில் அமர்த்திக்கொள்வார்கள்.

فَلَمَّا مَرِضَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ دَخَلَتْ فَاطِمَةُ فَأَكَبَّتْ عَلَيْهِ فَقَبَّلَتْهُ ثُمَّ رَفَعَتْ رَأْسَهَا فَبَكَتْ، ثُمَّ أَكَبَّتْ عَلَيْهِ ثُمَّ رَفَعَتْ رَأْسَهَا فَضَحِكَتْ

---

2 இது நபிமொழியாக இல்லாமல் நபித்தோழரின் கூற்றாகவே பதிவாகியுள்ளது. பொதுவாக பிற ஆதாரங்கள் ஃபாத்திமாவை நபியவர்கள் மிகவும் நேசித்தார்கள் என்பதை உறுதிசெய்வதால் ஆசிரியர் இதனை மேற்கோள் காட்டுகிறார்.

6

சொர்க்கத்துப் பெண்களின் தலைவி

❀

ஃபாத்திமா ﵂ அவர்களின் சிறப்புகளில் ஒன்று 'அவர் சொர்க்கத்துப் பெண்களின் தலைவியாவார்.' ஹுதைஃபா ﵁ அறிவிக்கிறார்:

سَأَلْتُنِي أُمِّي مَتَى عَهْدُكَ تَعْنِي بِالنَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقُلْتُ مَا لِي بِهِ عَهْدٌ مُنْذُ كَذَا وَكَذَا، فَنَالَتْ مِنِّي، فَقُلْتُ لَهَا: دَعِينِي آتِي النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَأُصَلِّيَ مَعَهُ المَغْرِبَ، وَأَسْأَلُهُ أَنْ يَسْتَغْفِرَ لِي وَلَكِ، فَأَتَيْتُ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَصَلَّيْتُ مَعَهُ المَغْرِبَ فَصَلَّى حَتَّى صَلَّى العِشَاءَ، ثُمَّ انْفَتَلَ فَتَبِعْتُهُ، فَسَمِعَ صَوْتِي، فَقَالَ: مَنْ هَذَا، حُذَيْفَةُ؟ قُلْتُ: نَعَمْ، قَالَ: مَا حَاجَتُكَ غَفَرَ اللَّهُ لَكَ وَلِأُمِّكَ؟ قَالَ: إِنَّ هَذَا مَلَكٌ لَمْ يَنْزِلِ الأَرْضَ قَطُّ قَبْلَ هَذِهِ اللَّيْلَةِ اسْتَأْذَنَ رَبَّهُ أَنْ يُسَلِّمَ عَلَيَّ وَيُبَشِّرَنِي بِأَنَّ فَاطِمَةَ سَيِّدَةُ نِسَاءِ أَهْلِ الجَنَّةِ وَأَنَّ الحَسَنَ وَالحُسَيْنَ سَيِّدَا شَبَابِ أَهْلِ الجَنَّةِ

எனது தாய் என்னிடம் 'நீ எப்போது நபியவர்களைக் கண்டாய்' என்று கேட்டார். 'நான் இத்தனை நாட்களாக அவர்களைப் பார்க்கவில்லை' என்று கூறினேன். அதற்கு என் தாயார் என்னைக் கடிந்துகொண்டார். நான் அவரிடம், 'என்னை விடுங்கள். நான் நபியவர்களிடம் சென்று மஃரிபு தொழுகிறேன். பிறகு உங்களுக்கும் எனக்கும் பாவமன்னிப்புக் கோருமாறு வேண்டுகிறேன்' என்றேன்.

நான் நபியவர்களுடன் வந்து மஃரிப் தொழுதேன். அவர்கள் உபரியான தொழுகைகளை தொழுதுவிட்டு பின்னர் இஷாவும் தொழுதார்கள். பின்னர் வீட்டிற்குத் திரும்பினார்கள். நான் அவர்களைப் பின்தொடர்ந்தேன். அவர்கள், எனது குரலைக் கேட்டு ஹுதைஃபாவா என்று கேட்டார்கள். நான் 'ஆம்' என்று கூறினேன். அதற்கு அவர்கள், 'உம்முடைய தேவை என்ன? அல்லாஹ் உம்மையும் உமது தாயாரையும் மன்னிக்கட்டும்'

8

ஒரே நேரத்தில் சிரிப்பும் அழுகையும்

❀

ஆயிஷா ﵂ அறிவிக்கிறார்:

أَقْبَلَتْ فَاطِمَةُ تَمْشِي كَأَنَّ مِشْيَتَهَا مَشْيُ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، فَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَرْحَبًا بِابْنَتِي ثُمَّ أَجْلَسَهَا عَنْ يَمِينِهِ، أَوْ عَنْ شِمَالِهِ، ثُمَّ أَسَرَّ إِلَيْهَا حَدِيثًا فَبَكَتْ، فَقُلْتُ لَهَا لِمَ تَبْكِينَ؟ ثُمَّ أَسَرَّ إِلَيْهَا حَدِيثًا فَضَحِكَتْ، فَقُلْتُ مَا رَأَيْتُ كَاليَوْمِ فَرَحًا أَقْرَبَ مِنْ حُزْنٍ، فَسَأَلْتُهَا عَمَّا قَالَ فَقَالَتْ مَا كُنْتُ لِأُفْشِيَ سِرَّ رَسُولِ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، حَتَّى قُبِضَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، فَسَأَلْتُهَا, فَقَالَتْ أَسَرَّ إِلَيَّ إِنَّ جِبْرِيلَ كَانَ يُعَارِضُنِي القُرْآنَ كُلَّ سَنَةٍ مَرَّةً، وَإِنَّهُ عَارَضَنِي العَامَ مَرَّتَيْنِ، وَلاَ أُرَاهُ إِلَّا حَضَرَ أَجَلِي، وَإِنَّكِ أَوَّلُ أَهْلِ بَيْتِي لَحَاقًا بِي. فَبَكَيْتُ، فَقَالَ أَمَا تَرْضَيْنَ أَنْ تَكُونِي سَيِّدَةَ نِسَاءِ أَهْلِ الجَنَّةِ، أَوْ نِسَاءِ المُؤْمِنِينَ فَضَحِكْتُ لِذَلِكَ

‘ஃபாத்திமா நபியவர்களைப் போன்று நடந்து வந்தார். நபியவர்கள், எனது மகளே வருக என்று வரவேற்று தமது வலப்பக்கத்தில் அவரை அமர்த்திக் கொண்டார்கள். பிறகு அவரிடம் இரகசியமாக ஏதோ கூறினார்கள். ஃபாத்திமா அழுதார். நீங்கள் ஏன் அழுகிறீர்கள் என்று கேட்டேன். மீண்டும் நபியவர்கள் இரகசியமாக ஒன்றைக் கூறினார்கள். அதற்கு அவர் சிரித்தார். ‘இன்றுபோல் உங்களிடம் கவலைக்கு நெருக்கமான மகிழ்ச்சியைக் காணவில்லை’ என்றேன். நபியவர்கள் கூறிய விசயம் குறித்து நான் ஃபாத்திமாவிடம் கேட்டேன். அதற்கு அவர், ‘அல்லாஹ்வின் தூதருடைய இரகசியத்தை வெளிப்படுத்தமாட்டேன்’ என்று கூறிவிட்டார்.

நபியவர்கள் மரணித்த பின்னர் நான் அது குறித்து ஃபாத்திமாவிடம் மீண்டும் கேட்டேன். அதற்கு அவர் கூறினார்: ‘அவர்கள் என்னிடம் கூறிய இரகசியம் இதுதான், ‘ஒவ்வொரு வருடமும் ஜிப்ரீல் ஒரு முறைதான் குர்ஆனை ஒப்புவிக்குமாறு கூறுவார்.